| | |
|---|---|
| மையம் : ______________ <br> மேற்பார்வையாளர் <br> கையொப்பம்: ______________ | பெயர்: ______________ <br> பதிவு எண்: ______________ <br> நாள் : ______________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு - டிசம்பர் 2017**

**நேரம் : 1.30 மணி** | **மதிப்பெண் : 50**

Time : 1.30 hrs. | Total Marks : 50

**பகுதி - 1**

I. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following text and answer the questions given below in a single line.

(5x1=5)

ஒரு நாள் அதியமான் தனது வீரர்களுடன் வேட்டைக்குச் சென்றிருந்தான். அவன் வேட்டைக்குப் போயிருந்த மலைப் பிளவில் ஒரு நெல்லிமரம் நின்றது. அந்த நெல்லிமரத்தின் நுனிக் கிளையில் ஒரு நெல்லிக்கனி பழுத்திருந்தது. அந்த நெல்லிக்கனியை உண்பவர்கள் நீண்ட நாள் உயிர் வாழ்வார்கள் என்று அதியமான் அறிந்திருந்தான். தனது உயிரையும் பொருட்படுத்தாமல் மலைப்பிளவில் நின்ற நெல்லிமரத்தில் அவன் ஏறினான். அந்த நெல்லிக்கனியைப் பறித்துக் கொண்டு கீழே இறங்கினான்.

**வினாக்கள் :**

1. அதியமான் யாருடன் வேட்டைக்குப் போனான்?

______________________________

2. அதியமான் மலைப் பிளவில் எதைப் பார்த்தான்?

______________________________

3. நெல்லிக்கனி எங்கே பழுத்திருந்தது?

---

4. யார் நீண்ட நாள் வாழ்வார்கள்?

---

5. நெல்லிக்கனியைப் பறித்தது யார்?

---

## II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.

Read the following poem and answer the questions given below in a single line.

**(5x1=5)**

ஞானத்தில் முன்னேறுவோம்! - விஞ்
ஞானத்தில் முன்னேறுவோம்!
வானத்தில் பறந்து வையத்தையே அளந்து
ஞானத்தில் முன்னேறுவோம்! – விஞ்
ஞானத்தில் முன்னேறுவோம்!

மண்ணுக்குள்ளே இருந்து
எண்ணெய் எடுப்போம்! – தினம்
வகைவகைச் சோதனையில்
நெல்லைக் குவிப்போம்!
விண்ணைப் பிளந்து சென்று
நோட்டமிடுவோம் ! – நாம்
விரைவாக நல்வாழ்வுத்
தோட்ட மிடுவோம்!

**வினாக்கள்**

1. வையத்தை எவ்வாறு அளப்பது?

---

2. எதில் முன்னேற வேண்டும்?

---

3. நெல்லைக் குவிக்க என்ன செய்ய வேண்டும்?

---

4. எங்கு நோட்டமிட வேண்டும்?

______________________________

5. விரைவாக எத்தகைய தோட்டமிட வேண்டும்?

______________________________

## III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.

Form meaningful sentences using the following words. (5x2=10)

1. மனம் தளராமல்

______________________________

______________________________

2. முன்மாதிரி

______________________________

______________________________

3. முனைப்பு காட்ட

______________________________

______________________________

4. மெய்ப்பொருள்

______________________________

______________________________

5. திருந்தச் செய்

______________________________

______________________________

IV. **பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

Answer any Five of the following questions in a few lines. (5x4=20)

1. தாயுமானவர் இறைவனிடம் வேண்டுவன யாவை?
2. தாயானவள் தன் குழந்தையை எவ்வாறு தாலாட்டுகிறாள்?
3. மயங்கிக் கிடந்த புத்தரைக் கண்ட சிறுவன் என்ன செய்தான்?
4. கொன்றை வேந்தனில் தாய் தந்தை பற்றிய ஔவையாரின் கருத்துகள் யாவை?
5. 'குழந்தைத் தொழிலாளர்' பற்றிக் கூறுக.
6. எழிலுக்கு அப்பா கூறிய அறிவுரை யாது?
7. நெல்லிக்கனியைப் பற்றி அதியமான் ஔவையாரிடம் கூறியது யாது?
8. தனது விருப்பமாகச் சதுரங்கச் சாதனையாளர் கூறியது யாது?
9. பால் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
10. வினையெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

**V** **பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**

Write a letter on any one of the given subjects. (1x10=10)

1. விளையாட்டுத் துறையில் சாதனை படைத்த உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.
2. உன் ஊர் திருவிழாவின் சிறப்பினை விளக்கி நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக.
3. நீ கண்டு பயனடைந்த அறிவியல் கண்காட்சி குறித்து வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

*****